பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

09 02 2025 **SUNDAY** **6.30 PM**

## மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. நக்சலைட் பிரச்சினைக்கு முடிவு கட்ட வேண்டும் என்பதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

2. மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதில் மத்திய அரசு எவ்வித பாரபட்சமும் இன்றி செயல்படுவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு எல். முருகன் தெரிவித்துள்ளார்.

3. தமிழகத்தை அரசியல் ரீதியாக பழிவாங்கும் நோக்கில் மத்திய அரசு செயல்படுவதாக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் குற்றம் சாட்டியுள்ளார்.

4. மத்திய அரசுக்கு எதிராக பொய்யான குற்றச்சாட்டுகளை திரு மு.க.ஸ்டாலின் தெரிவிப்பதாக பிஜேபி மாநிலத்தலைவர் திரு அண்ணாமலை கூறியுள்ளார்.

5. ஆசிய கோப்பை பாரா வில்வித்தை போட்டியில், இந்தியா இரண்டு தங்கப்பதக்கங்களை வென்றது.

---- *இனி விரிவான செய்திகள்* ---

<<<<<<>>>>>

நக்சலைட் பிரச்சினைக்கு முடிவு கட்ட வேண்டும் என்பதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், சத்தீஸ்கரில் பாதுகாப்புப்படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் 31 நக்சலைட்டுகள் சுட்டுக்கொல்லப்பட்டதை சுட்டிக்காட்டியுள்ளார்.

நக்சலைட்டுகள் இல்லாத இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற திசையில் பயணிக்கும் பாதுகாப்புப்படையினருக்கு கிடைத்த மிகப்பெரிய வெற்றி இது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நடவடிக்கைகளின்போது உயிரிழந்த இரண்டு பாதுகாப்புப்படை வீரர்களின் குடும்பத்தினருக்கு இரங்கல் தெரிவித்துக்கொள்வதாகவும் அவர் கூறியுள்ளார்.

அடுத்த ஆண்டு மார்ச் மாதத்திற்குள் நக்சலைட்டுகள் முழுமையாக அகற்றப்படுவார்கள் என்றும் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

முன்னதாக, பிஜப்பூர் மாவட்டத்துக்கு உட்பட்ட தேசிய பூங்காவின் வனப்பகுதியில் நக்சலைட்டுகள் பதுங்கியிருப்பதாக கிடைத்த தகவலையடுத்து, பாதுகாப்புப்படையினர் அப்பகுதியை சுற்றிவளைத்து தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்.

அப்போது இருதரப்புக்கும் இடையே துப்பாக்கிச்சண்டை நேரிட்டது. இதில் 31 நக்சலைட்டுகள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இரண்டு பாதுகாப்புப்படை வீரர்கள் உயிரிழந்தனர்.

அப்பகுதியிலிருந்து ஏராளமான ஆயுதங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

<<<<<<>>>>>

மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதில் மத்திய அரசு எவ்வித பாரபட்சமும் இன்றி செயல்படுவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு எல். முருகன் கூறியுள்ளார்.

இன்று புதுச்சேரியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*(சவுண்ட் பைட் - எல். முருகன் - 40 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>

தமிழகத்தை அரசியல் ரீதியாக பழிவாங்கும் நோக்கில் மத்திய அரசு செயல்படுவதாக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் குற்றம் சாட்டியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், தேசிய கல்விக்கொள்கையை நிராகரித்ததன் காரணமாக, தமிழக மாணவர்களுக்குரிய 2 ஆயிரத்து 152 கோடி ரூபாய் நிதி வழங்கப்படவில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

இநத் குற்றச்சாட்டை நிராகரித்துள்ள பிஜேபி மாநிலத்தலைவர் திரு அண்ணாமலை, கல்வியை அரசியலாக்கி, கல்வியின் தரத்தை குறைத்து தமிழக மாணவர்களுக்கு சர்வதேச தரத்திலான கல்வி கிடைக்காமல் செய்ததற்காக திரு மு.க.ஸ்டாலினும், திமுக-வினரும் வெட்கப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை பதிவு செய்துள்ள அவர், நடப்பு கல்வியாண்டின் தொடக்கத்தில் இருந்தே பிஎம் ஸ்ரீ திட்டத்தை செயல்படுத்துவதாக தமிழக அரசு உறுதிமொழி அளித்ததை சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்த உறுதிமொழியை நிறைவேற்றாமல், செயல்படுத்தாத ஒரு திட்டத்திற்காக மத்திய அரசு எவ்வாறு நிதி வழங்கும் என்றும் அவர் வினவியுள்ளார்.

தமிழகத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி, பிற மாநிலங்களுக்கு திருப்பி விடப்படுவதாக பொய்யான தகவலை திரு மு.க.ஸ்டாலின் பரப்புவது ஏற்புடையது அல்ல என்றும் திரு அண்ணாமலை கூறியுள்ளார்.

<<<<<<>>>>>

தமிழகத்தில் 38 உயரதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இதன்படி, சேலம் மாநகராட்சி ஆணையர் திரு ரஞ்ஜித் சிங், தேனி மாவட்ட ஆட்சியராக நியமிக்கப்பட்டுள்ளார்.

தேனி மாவட்ட ஆட்சியர் திருமதி ஷஜீவனா, சிறப்பு திட்ட செயலாக்கத்துறையின் கூடுதல் செயலராக நிமியக்கப்பட்டுள்ளதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

பள்ளிக்கல்வித்துறை செயலர் திருமதி மதுமதி, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை செயலராக நியமிக்கப்பட்டுள்ளார்.

கூட்டுறவுத்துறைக்கான கூடுதல் தலைமைச்செயலர் திரு ராதாகிருஷ்ணன், மின்சார வாரியத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குனராக நியமிக்கப்பட்டுள்ளார்.

<<<<<<>>>>>

தமிழகத்தில் பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்களை கட்டுப்படுத்த திமுக அரசு தவறிவிட்டதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக, இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், மாநிலம் முழுவதும் அண்மையில் பெண்களுக்கு எதிராக நடைபெற்ற பாலியல் வன்கொடுமை சம்பவங்களை பட்டியலிட்டுள்ளார்.

சட்டம் – ஒழுங்கினை முறையாக பராமரிக்க திமுக அரசு உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

திமுக அரசின் நிர்வாக திறமையின்மை காரணமாக விவசாயிகள், நெசவாளர்கள், வியாபாரிகள், தொழில்துறையினர், அரசு ஊழியர்கள், பெண்கள் என அனைத்து தரப்பினரும் பாதிக்கப்பட்டுள்ளதாக திரு எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

சேலம் மாவட்டம் ஏற்காடு அரசு மேல்நிலைப்பள்ளியில் பத்து மற்றும் 12-ஆம் வகுப்பு பயிலும் மாணவிகளை பாலியல் வன்கொடுமை செய்ததாக அப்பள்ளியின் ஆசிரியர் ஒருவர் கைது செய்யப்பட்டிருப்பது அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது என்று பாமக நிறுவனர் மருத்துவர் ச ராமதாசு கூறியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இத்தகைய கொடுமைகள் எப்போது முடிவுக்கு வரும் என்ற எதிர்பார்ப்பு மக்களிடையே ஏற்பட்டிருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

மாணவிகள் மற்றும் பெண்களுக்கு எதிராக பாலியல் குற்றங்களில் ஈடுபடுவோருக்கு கடுமையான தண்டனைகளை விரைவாக பெற்றுத்தர திமுக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் திரு ராமதாசு வலியுறுத்தியுள்ளார்.

<<<<<<>>>>>

தமிழகத்தில் மாணவிகள் தொடங்கி, மூதாட்டி வரை பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாவது கண்டிக்கத்தக்கது என்று தேமுதிக பொதுச்செயலாளர் திருமதி பிரேமலதா விஜயகாந்த் கூறியுள்ளார்.

இன்று மதுரையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், திமுக அரசு தங்களை பிரச்சினைகளிலிருந்து காப்பற்றிக்கொள்வதற்காக மத்திய அரசை குறை சொல்வதாக தெரிவித்தார்.

<<<<<<>>>>>

மணிப்பூர் முதலமைச்சர் திரு பைரேன் சிங் தமது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

அம்மாநில ஆளுநர் திரு அஜய்குமார் பல்லாவை சந்தித்து, தமது ராஜினாமா கடிதத்தை அவர் வழங்கினார்.

<<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

தூத்துக்குடி மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் கணினி மூலம் பட்டா பெறுவதற்கான சிறப்பு முகாமை மாநில அமைச்சர் திருமதி கீதா ஜீவன் இன்று தொடங்கிவைத்தார்.

---------------

சிவகங்கை மாவட்டத்தில் கொத்தடிமை தொழிலாளர்கள் முறையை ஒழிக்க அனைவரும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று ஆட்சியர் திருமதி ஆஷா அஜீத் கேட்டுக்கொண்டுள்ளார்.

------------------

கன்னியாகுமரி மாவட்டம் செண்பகராமன்புதூரில் இரண்டு ஆண்டுகளாக பூட்டிக்கிடந்த கயறு தொழிற்சாலையில் இன்று அதிகாலை தீ விபத்து ஏற்பட்டது. இதுகுறித்து காவல்துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

--------------

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் தடை செய்யப்பட்ட குட்கா பொருட்களை பதுக்கிவைத்து விற்பனை செய்த ஒருவரை காவல்துறையினர் கைது செய்தனர்.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசிய கோப்பை பாரா வில்வித்தை போட்டியில், இந்தியா இரண்டு தங்கப்பதக்கங்களை வென்றது.

தாய்லாந்தில் நடைபெற்றுவரும் இப்போட்டியின், ஆடவர் மற்றும் மகளிர் குழு பிரிவுகளில் இந்தியா இப்பதக்கத்தை கைப்பற்றியது.

இப்போட்டியில இந்தியா இதுவரை 4 தங்கம், 2 வெள்ளிப் பதக்கங்களை வென்றுள்ளது.

---------------

இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் 305 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பேட் செய்துவரும் இந்தியா ஆறு புள்ளி ஒரு ஓவரில் விக்கெட் இழப்பின்றி, 48 ரன் எடுத்திருந்த நிலையில், மைதானத்தில் போதிய வெளிச்சமின்மை காரணமாக ஆட்டம் தடைபட்டுள்ளது.

கட்டாக்கில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் டாஸ் வென்று முதலில் பேட் செய்த இங்கிலாந்து 49 புள்ளி ஐந்து ஓவரில் 304 ரன் எடுத்து ஆட்டமிழந்தது.

அதிகபட்சமாக, ஜோ ரூட் 69 ரன் எடுத்தார்.
ரவீந்திர ஜடேஜா மூன்று விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

---------

விதர்பா அணிக்கு எதிரான ரஞ்சிக்கோப்பை கிரிக்கெட் போட்டி காலிறுதி ஆட்டத்தின் இரண்டாம் நாளான இன்று ஆட்டநேர இறுதியில் தமிழக அணி முதல் இன்னிங்சில் 6 விக்கெட் இழப்பிற்கு 159 ரன் எடுத்துள்ளது.

நாக்பூரில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் விதர்பா அணி முதல் இன்னிங்சில் 353 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

----------------

துனிஷியாவில் நடைபெற்ற சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Manas Dhamne** பட்டம் வென்றார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில அவர், 2-6, 6-0, 6-2 என்ற செட் கணக்கில், இத்தாலியின் **Lorenzo Carboni** –ஐ வென்றார்.

-------------

சீனாவில் நடைபெற்றுவரும் குளிர்கால ஆசிய விளையாட்டுப் போட்டிகளின், ஐஸ் ஹாக்கிப்பிரிவில் இந்தியா 4-2 என்ற கோல் கணக்கில் **Macau**–வை வென்றது.

இருப்பினும் இதர போட்டிகளில் தோல்வியடைந்ததன் மூலம் காலிறுதிக்கு முன்னேறும் வாய்ப்பினை இழந்தது.

**<<<<<<END>>>>>**